## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### தர்மபுரி மாவட்டத்தில் கால்நடைகளுக்குப் போதிய தீவனம் கிடைக்காமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், **என். எஸ். வி. சித்தன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் :** இராமநாதபுரம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் அண்மைக்காலமாக உழவு மாடுகளுக்குப் போதிய தீவனம் கிடைக்காத காரணத்தால் அவைகளைப் பராமரிக்க முடியாமல் அம்மாவட்ட கிராமவாசிகள் அந்த உழவு மாடுகளை சொற்ப விலைக்கு விற்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளதால் அவர்கள் மத்தியில் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைக்க வேண்டும்" என்றும் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியத்துவம் என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :** பேரவைத் தலைவர் அவர் களே, சமீபத்தில் தமிழகம் பூராவிலும் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக இன்றைக்குத் தமிழகம் பூராவிலும் மாட்டுத் தீவனம் கிடைக்காமல் இருக் கிறது. குறிப்பாக சேலம், தருமபுரி, முகவை போன்ற மாவட்டங்களில் இந்த நிலை ஏற்பட்டு அதன் காரணமாக மாட்டுத் தீவனம் விலை அதிகமாகி, அந்த அதிக விலைக்கு மாட்டுத் தீவனம் வாங்குவதற்கு முடியாமல், அந்த மாடுகளைக் குறைந்த விலைக்கு விற்பதற்கு ஏற்படும் நிலைமை இருக்கிறது. சில இடங்களில் வாங்குவதற்கு யாரும் முன்வராததால் அந்த மாடுகளைப் பட்டிவிப்போட்டு விடுகிற அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. கண்ட விலைக்கு விற்றுக் கிடைத்ததை வாங்கிக்கொள் என்று கிராமப்புறங்களில் சொல்வார்கள். இப்படி பல்வேறுமாவட்டங்களில் நிலைமை இருக்கிறது. அதனால் பல மாடுகள் பட்டினியால் சாகின்ற நிலைமை ஏற்பட்டுக்கொண்டு இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். ஆகவே அரசாங்கம் இதற் கான ஒரு நடவடிக்கையை தீவிரமாக எடுக்க வேண்டும். மக்களைப் பாதுகாக்க எப்படி வறட்சி நிவாரணப் பணிகளை அரசாங்கம் எடுக்கிறதோ அதைப்போல இந்தக் கால்நடைத் தீவனங்கள் போதுமான அளவுக்கு அளிக்கப் பட்டு, கால்நடைகள் பாதுகாப்புககான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இதுபற்றி விரிவாக விவாதித்து நடவடிக்கை எடுக்க, அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

* **மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இராமநாதபுரம் மாவட்டமும் ஒன்றாகும். இங்கு வறட்சிநிலை இருப்பினும் தீவனப் பற்றாக்

1981 ஏப்ரல் 27] [திருமதி கோமதி சீனிவாசன்]

குறை காரணமாக கால்நடை இறப்பு எதுவும் இல்லை. 1977 ஆம் ஆண்டு கணக்குப்படி இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை—பசுமாடுகள் 6,13,321; எருமை மாடுகள் 1,26,523; ஆடுகள் 6,20,936. பொதுவாக பருவமழை தவறியதன் காரணமாக தமிழகத்தில் பல மாவட்டங்கள் தற்போது வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அதன் விளைவாக் கால்நடைகளுக்கு போதிய தீவனம் கிடைக்காத நிலைமை ஏற்பட்டுள்ளது. தமிழக அரசின் உத்தரவுப்படி கால்நடைகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு, கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு குறிப்பாக சிறு விவசாயிகள், குறுவிவசாயிகள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களின் கால்நடைகளுக்கு மலிவு விலையில் வைக்கோல் விற்க தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதன் மூலம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 15 கால்நடை மருந்தகங்களில் மலிவு விலையில் வைக்கோல் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி, சூரன்காடு, பரமக்குடி, ஆர். எஸ். மங்கலம், திருச்சுளி ஆகிய 5 கால்நடை மருந்தகங்களில் வைக்கோல் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வைக்கோல் மிகுதியாகக் கிடைக்கும் மதுரையிலிருந்து வைக்கோல் கொள்முதல் செய்யப்பட்டு இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 24—4—1981 முதல் அனுப்பப்பட்டு வருகிறது. அங்கே அங்கீகரிக்கப்பட்ட கால்நடை மருந்தகங்கள் மூலம் அசல் விலைக்கு விநியோகம் செய்யப்படும்.

கால்நடைகள் தொற்றுநோய் தடுப்பு நடவடிக்கையாக வெக்கைநோய், சப்பை நோய், தொண்டையடைப்பான் நோய் போன்ற நோய்கள் ஏற்படா வண்ணம் தடுப்பு ஊசி போடப்பட்டு வருகிறது. நோய்த் தடுப்பு நடவடிக்கையாக இதுவரை கோழிரி நோய் தடுப்புக்காக 8,000 டோஸ்கள் 'போலி வேலன்ட் வாக்சி'-யும், 8,000 டோஸ்கள் 'மோனோ வேலன்ட் வாக்சி'-யும் வழங்கப்பட்டுள்ளன.

அண்மையில் மத்திய அரசு குழு ஒன்று அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களான தர்மபுரி, வடாற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வறட்சி நிலையை நேரில் கண்டறிய சுற்றுப்பயணம் மேற்கொண்டது. இக்குழு சென்னையில் உயர்மட்ட அலுவலர்களுடன் கலந்து பேசியது. பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதனிடையில் மத்திய அரசு உதவித் தொகை பெறுவதற்கு முன்பு உடனடி நிவாரணம் அளிக்கும் பொருட்டு தமிழக அரசு ஆணை எண் 781, வருவாய்த் துறை, நாள் 31—3—1981-ன் மூலம் தர்மபுரி, வடாற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டங்களில் மலிவு விலையில் ஏழை விவசாயிகளுக்கு

வைக்கோல் விற்க ஏற்பாடு செய்யும் பொருட்டு 20 இலட்சம் ரூபாய் அளித்துள்ளது. தற்போது அதிக அளவில் பாதிக்கப்பட்ட புதுக்கோட்டை, தர்மபுரி, வடாற்காடு, இராமநாதபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் மாவட்டந்தோறும் 5 கால்நடை மருந்தகங்கள் மூலம் வைக்கோல் விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டங்களில் வைக்கோல் விற்க கூடுதலாக 20 கால்நடை உதவி மருத்துவர்களும், 40 பணியாளர்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

வைக்கோலைப் பெறுவதற்காக திருச்சி, தஞ்சை, மதுரை, நெல்லை ஆகிய மாவட்டங்களில் அரசுப் பண்ணைகளிலும் தனி நபர்களிடத்திலும் அதிகப்படியாக உள்ள வைக்கோலை வாங்கி, தேவைப்பட்ட இடங்களுக்கு அனுப்ப கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களைக் கொண்ட 18 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் மத்திய அரசு உதவித் தொகை பெறப்பட்டபின் மாவட்டங்களில் மேலும் மலிவு விலையில் வைக்கோல் விற்க தகுந்த நடவடிக்கை எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

### 3. கவன ஈர்ப்புகள்.

**(அ) சுழல் காற்றால் அம்பாசமுத்திரம் தொகுதி பிரமதேசத்தில் ஏற்பட்டுள்ள சேதம்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. கிருஷ்ணன், எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

(முற்பகல் 10-10)

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவர் அவர்களே, அம்பாசமுத்திரம் தொகுதியில் உள்ள பிரமதேசம் வட்டாரத்தில் 27—3—1981-ல் வீசிய சுழற்காற்றின் காரணமாக சுமார் 1 லட்சம் ரூபாய்க்கு மேல் விவசாயி